# போர்வாள்

**"போர்வாள்"**

**சந்தா விபரம்**

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வாரத்தாள்

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 மார்கழி 17 — 7—1—50 சனிக்கிழமை | வீச்சு 19


கைத்தக்கண்ணாடிமூலம் நாட்டுக்கு:

# தமிழ்ப்பற்று! - ஒரு சிறுகதை!


[பாரதிதாசன்.]


அவர்கள் உணர்ச்சியுள்ள இளைஞர்கள், தமிழ்ப்பற்று மிக்கவர்கள்! சென்ற ஆண்டில் கோடையில் மாலைப்போதில் அவர்கள் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கந்தசாமி சொன்னான் தமிழுக்கு நம்மாலான தொண்டு செய்ய வேண்டும் என்று. கந்தசாமியின் அச் சொற்கள் மற்ற இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன! தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும், ஆம்! என்று உறுதி செய்தார்கள் அனைவரும்.

தமிழ்க்கழகம் என்ற பெயரால் ஒரு நிறுவனம் நிறுவப் பெற்றது. ஆண்டு ஒன்றுக்குள் "தமிழ்க் கழகத்தில் வந்து சொற்பொழிவாற்றாத தமிழ்ப்புலவரே தமிழ்நாட்டில் இல்லை" யென்று சொல்லும்படி ஆயிற்று, ஆண்டுவிழா மூன்றுநாள் நிகழ்ச்சியாக மிகச் சிறந்த முறையில் கொண்டாடப் பெற்றது. ஊர் மக்களுக்குத் தமிழ்க்கழகம் என்றால் கற்கண்டு. அப்படி ஒரு கழகமும் இதுவரை ஊராரின் நெஞ்சைக் கவர்ந்திருக்க முடியாது. தமிழ்க் கழகத்தார், தம் கழகத்தின் சார்பில் ஒரு தமிழ் விடுதி ஏற்படுத்தத் திட்டம் போட்டார்கள். உயர் வகுப்பில் நுழையும்படி மாணவர்கட்குப் பயிற்சி யளிப்பதுதான் தமிழ் விடுதியின் நோக்கம்.

சரியாக நாற்பது மாணவர்கள் தமிழ் விடுதியில் சேர்ந்தார்கள். மூன்று ஆசிரியர்களைச் சம்பளத்திற்கு அமர்த்தினார்கள் கழகத்தார். வகுப்புக்கள் செவ்வனம் நடந்து வந்தன.

மாதக் கடைசியில், கழகத்தார் கேட்பதற்குள், மூன்று ரூபாய் வீழுக்காடு நாற்பது மாணவரும் நூற்றிருபது ரூபாயைக் கொண்டு வந்து குவித்தார்கள். கழகத்தார் அனைவர்க்கும் ஒரே மகிழ்ச்சி!

கழகத்தின் ஆசிரியர் மூவரில் வீராசாமிப்புலவர் குறிப்பிடத் தகுந்தவர். நிறைந்த தமிழ்ப்புலமை, பயிற்று முறை, பண்பு, ஒழுக்கம் எதிலும் குறைந்தவரல்லர். மாதம் பிறந்து ஐந்து தேதியும் ஆய்விட்டது. எட்டாந்தேதி சம்பளம் வந்துவிடும் என்று தமிழ் விடுதியின் ஆசிரியர்களில் இரண்டுபேர் பேசிக்கொண்டார்கள். அதற்கு முன்பே சம்பளம் கைக்கு வந்துவிடும் என்று வீராசாமிப் புலவர் நம்பினார். கழகத்து இளைஞர்கள் உணர்ச்சியுள்ளவர்கள்! தமிழ்ப்பற்று மிக்கவர்கள்!!

ஆறுந்தேதி இரவு பத்துமணியடித்தது. வீராசாமிப் புலவர் குடும்பம், பசியின் நினைக்க முடியாத ஆழத்தில் முழுகிற்று. அந்தத் துன்ப நிலையிலும், புலவருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு மகிழ்ச்சி; என்னவென்றால் ஐந்து பிள்ளைகளும் பசியால் விம்மியழுது சோர்ந்ததால் குப்புறப் படுத்துத் தூங்கி விட்டார்கள்!

புலவர், தம் ஒட்டிய வயிற்றை மேலும் ஒரு கையால் அழுத்தியபடி, குடியிருக்கும் பகுதியில் ஒரு புறம் கிடந்த முறத்தைத் தூக்கிக், கூரைமேல் செருகிவிட்டு அந்த இடத்தில் சோர்ந்து உட்கார்ந்தார். எதிரில் பெருத்த வயிற்றோடு அவர் மனைவி நின்றுகொண்டிருந்தாள். பெருத்த வயிறென்பது உண்வுண்டதால் பெருத்ததன்று. அந்த அம்மாவின் வயிற்றில் ஆறாவது குழந்தை வாழ்கின்றது.

"பெருங்காற்று! விடிந்தால் அமைதி"

—என்றார் புலவர்.

காலையில் சம்பளம் வருவது உறுதிதானே

—என்றாள் மனைவி

புலவர் சொல்லுகிறார்: அதிகாலையில் கழகத்தலைவரும், பொருட்காப்பாளரும் வெளியிற் போகுமுன் அவர்களை வளைத்துக்கொள்ளுகிறேன். சம்பளத்தை வாங்கிக்கொண்டு நேரே வீட்டுக்கு வருகிறேன். உன்னிடம் நாலேகால் ரூபாயைப் போட்டுவிட்டு நேரே கடைக்குப் போய்விடுகிறேன்! நீ சாலையில் விறகு முதலியவைகளை வண்டியாக வாங்கிவிடு. நான் கடையில் ஆகவேண்டியதை முடித்துக்கொண்டு ஓடிவந்துவிடுகிறேன். அரிசி முதலியவைகளை நாம் சில்லறையாக அவ்வப்போது வாங்குவது சரியல்ல. ஒரு மூட்டை அரிசி, ஒரு மாதத்திற்கு வேண்டிய பலசரக்கு வாங்கிவந்துவிடுகிறேன். நான் கடைத்தெருவில் சிற்றுணவு பார்த்துக்கொள்ளுகிறேன். காலை யுணவைச் சிறிது நல்ல முறையில் ஏற்பாடு செய், பிள்ளைகட்கு!

மனைவி: ஆமாம்! இராப்பட்டினி உட்கார பிள்ளைகள்! இப்போதே ஒரு மாட்டுவண்டி பேசி வைத்துவிடலாமே, அரிசி முதலியவற்றை ஏற்றிவர!

புலவர்: காலையில் பார்த்துக்கொள்ளலாம். வண்டி கிடைக்கும்.

"மறுநாள் காலையில் எதிர்பார்க்கும் இன்பத்தை" நினைத்த புலவரும் மனைவியும் அந்தத் துன்ப இரவிலும் தூங்கமுடிந்தது

கழகத்தலைவரும் பொருட்காப்பாளரும் அலுவலை முன்னிட்டு வெளிச்செல்லுமுன் புலவர் அவர்களைக் கண்டார், அவர்கள் கழகக் கட்டிடத்தில் போயிருக்கும்படிச் சொன்னார்கள் புலவரை.

காலை எட்டுமணி யடித்துவிட்டது. வழக்கப்படி வகுப்புக்கள் தொடங்கின. புலவர் சத்தவண்டியை அனுப்பிவிட்டார் நடுப்பகல் பன்னிரண்டு மணிக்கு வரச் [illegible] வண்டிக்காரன் நல்ல மனிதன்! பன்னிரண்டு மணிக்குத் தலைவர் பூசையில் இருந்தார். பொருட்காப்பாளர் புதிய வெளியீடு ஒன்றைக் கருத்தாகப் படித்துக்கொண்டிருந்தார் சாப்பிட்டபின.

ஒரு மணியாயிற்று கழகத்தின் தலைவரும் பொருட்காப்பாளரும் சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டார்கள் என்று செய்தி கிடைத்தது புலவருக்கு. ஓய்வு என்பது அவர்கள் தூங்குவதின் பெயர்.

இரண்டு மணிக்கு வகுப்புக்கள் தொடங்கின. மாலை ஆறுமணிக்குத் தலைவரையும் பொருட்காப்பாளரையும் கழகக் கட்டிடத்தில் புலவர் காண முடிந்தது.

தலைவர் புலவரைக் கேட்டார் "இந்த மாதத்தில் வகுப்பு எத்தனை நாட்கள் நடந்தன" என்று,

ஆயுத பூசைக்காக ஒன்பது நாட்கள் வகுப்பு இல்லை. கழகத்தில் வடக்கத்தியார் இறங்கி இருந்ததால் மூன்று நாள் வகுப்பு நடக்கவில்லை. மதகடிபட்டுச் சந்தைக்குப் போய் மாடுவாங்கிவர என்னை அனுப்பினீர்கள்; அது ஒரு நாளும் சேர்ந்தால் பதின் மூன்று நாட்கள் போகப் பதினேழு நாட்கள் வகுப்பு நடந்தது என்று புலவர் பதில் சொன்னார். தலைவர், பொருட்காப்பாளருக்குக் கீழ் வருமாறு கட்டளை பிறப்பித்தார்: கால் ரூபாய் விழுக்காடு, பதின்மூன்று நாளின் தொகையைக் கழித்துக்கொண்டு மீதியைப் புலவரிடம் கொடுத்துக் கையொப்பம் பெற்றுக்கொள்ளுங்கள்.

பொருட்காப்பாளர் பிரஞ்சு நன்றாகப் படித்தவர், மொத்தச் சம்பளத் தொகையைப் பணமாக்கி அதில் பதின்மூன்று நாளின் மொத்தத் தொகையைக் கழித்து மீதியை எட்டால் வகுத்து ரூபாயாக்கி எதிரில் வைத்தார். புலவர் நாலேகால் ரூபாயைப் பார்க்கிறார் உறுத்தி!

அப்படியானால் எனக்கு மாதச் சம்பளம் ஏழரை ரூபாயா என்று வியப்போடு கேட்டார் புலவர்.

நூறாயிர ரூபாய்ச் சொத்துள்ள முன்னேற்றக்கழகத்தில் உம் போன்ற புலவர் வகுப்பு நடத்துவதற்கு ஆறு ரூபாய் தானே கொடுக்கிறார்கள் என்றார் தலைவர்.

நான் கூடுதலாக எதிர்பார்த்தேன். இது புலவர் சொன்னது. ஏழரை ரூபாய் அதிகம் என்பது எங்கள் கருத்து—தலைவர் சொன்ன பதில் இது. இங்கு ஆட்சி செலுத்தும் பிறநாட்டார், உங்களை விட அதிகமாக மதிக்கிறார்கள் தமிழை, இப்படிக்கு, வீராசாமிப்புலவர்.

பிறநாட்டினர், தம் பிரஞ்சு மொழிபோலவே எண்ணுகிறார்கள் தமிழையும். அவர்களுக்கு என்ன தெரியும? ஆதலால் பிரஞ்சு மொழிக்குக் கொடுக்கும் சம்பளத்தைப்போலவே தமிழுக்கும் கொட்டிக் கொடுக்கிறார்கள். இங்ஙனம் தங்கள் அன்புள்ள கழகத் தலைவர்.

பேச்சு முடிந்தது. நடுக்கும் நெஞ்சம். நாலேகால் ரூபாயை எடுத்துக் கொண்டு தள்ளாடி நடந்து சென்றது. வெளியில் வண்டிக்காரன்காத்திருந்ததற்குஇரண்டுபணம் பிடுங்கிக் கொண்டு போனான். அவன் நல்லவன்!

புலவர் எட்டாந்தேதி வரைக்கும் கழகத்திற்கு வரவில்லை. எட்டாந் தேதி மாலை, புலவர் இனித் தமிழ்க் கழகத்துக்கு மட்டுமன்றி எந்தக் கழகத்துக்கும் வரமுடியாதென்று தமிழ்க்கழகத்தார் கேள்விப் பட்டார்கள.

தமிழ்க் கழகத்தினர், உலகமக்கள் நிறைந்த பெருங் கழகத்திலிருந்து வேறு புலவரைத் தேடுகின்றார்கள், அவர்கள் உணர்ச்சியுள்ள இளைஞர்கள்! தமிழ்ப் பற்றுள்ள இளைஞர்கள்!!

—


தைப் பொங்கல் நாளில்

'பொன்னி' தரும் பொங்கல் மலர்

அரிய கலைப் படைப்பு சிறந்த அறிவு விருந்து

முற்றும் ஆர்ட் தாளில் அச்சாகிறது.

விலை ரூ. 3 12 0 தபாலில் ரூ. 4 0 0

"பொன்னி" புதுக்கோட்டை

# தலைவலி

## II

# ஒரு விளக்கம்

ஒரு தடவையாகிலும் தலைவலியால் கஷ்டப் படாதவர்கள் ஒருவரும் இருக்க மாட்டார்கள். சிலர் அடிக்கடி அதனால் அவதிப் படுகின்றனர். மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கும், தொழிலாளிகள், உத்தியோகஸ்தர் முதலியோர் தத்தம் வேலைக்கும் ஒழுங்காகச் செல்லாததற்கான காரணங்களில் கால்வாசி தலைவலி தானும். தலைவலி இவ்வளவு சாதாரணமாக இருத்தல் ஆச்சரியமன்று. ஏனெனில் அதற்கு அத்தனைக் காரணங்கள் இருக்கின்றன, அத்தனை நிலைமைகளில் அது உண்டாகக் கூடும். ஆனாலும் தலைவலியே ஒரு வியாதியல்ல; தேகத்தில் ஏதோ ஓர் அவையவம் அல்லது தொழில், கோளாறு அடைந்திருக்கிறதென்று காட்டும் ஓர் குறி அல்லது அடையாளமே அது.

முதலிலே தலைவலிகளிலெல்லாம் மிக்க அபாயகரமான தலைவலியைப் பற்றிப் படிப்போம். அது எதுவெனில், மூளையில் மாம்ச வளர்ச்சி, கட்டி, சிலந்தி முதலியவை உண்டாயிருப்பதால் தோன்றும் தலைவலி. வேதனை மிகவும் கடுமையாக இருக்கும். பல சமயங்களில் விண் விண்ணென்று தெறிக்கும். தலைக்குள்ளேயிருந்து ஏதோ ஒன்று வெளியில் வரப் பார்ப்பது போலத் தோன்றும். வேதனை ஒரே இடத்திலே இருந்தாலும் இருக்கலாம். அல்லது மண்டை முழுவதும் வியாபித்திருந்தாலும் இருக்கலாம். மூளையின் அடிப்புறத்திலே சதைவளர்ச்சி இளைப்பும் பட்சத்தில், வலி பிடர்த்தலையிலே காணும்; சில சமயம் கழுத்து வரையிலும் பரவலாம். இருமினால் அல்லது தும்மினால் அது அதிகப் படும். சாதாரணமாக விடியற்காலையிலே தான் கடுமையாகத் தாக்கும். நான்கு அல்லது ஐந்து மணிக்கே ஆளை எழுப்பி விட்டுவிடும். குமட்டலும் வாந்தியும் இருக்கலாம். திருஷ்டியும் கெடுதியடைந்து, ஒவ்வொரு வஸ்துவும் இரண்டு உருவமாகப் புலப்படலாம். இவ்வகைக் கபாலக் கூத்துள்ளவர்கள் உடனே ஒரு மூளை சாஜனிடம் காட்டிச் சிகிற்சை செய்து கொள்வது அவசியம்.

அடுத்தது அதிக இரத்த அழுக்கத்தினால் உண்டாகும் தலைவலி. இரத்த அழுக்கம் இருநூற்றுக்குப் பக்கத்திலே இருக்கும் போது தான் வலி சாதாரணமாக உண்டாகும். முதலிலே கூறிய தலைவலியைப் போல இதுவும் துடிப்பு வலிதான். இருமினாலும் தும்மினாலும் மூக்கினாலும் குனிந்தாலும் நோவு அதிகரிக்கும். பிணியாளியின் சரீர, மன உழைப்புகளின் அளவுக்குத் தக்கபடி கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கும். தலைநோவதோடு, திருஷ்டி கெட்டுப் பார்க்கப் படுபவை யாவும் புகை படிந்தவை போலத் தோன்றுதல். இடதுபுற மார்பில் வலித்தல் ஆகிய இலட்சணங்களும் இருக்கலாம். சிகிச்சை: உழைப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; இரத்த அழுக்கத்தையும் கூடிய மட்டும் இயற்கையான அளவுக்குக் கொண்டு வரவும் வேண்டும்.

மதுபானத்தினால் உண்டாகும் தலைவலிகள், மூளை வீங்கிப் போவதன்பயனாக உண்டாகுபவை. அவைகளுக்கேற்ற பரிகாரம் குடியை விட்டு விடுவதுதான். இதே விதமாகக் காப்பி, தேநீர், மசாலை ஆகிய கிளர்ச்சிப் பொருட்களால் பிறக்கும் தலை வேதனையையும் சுலபமாக நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

தலையிலே அடிபட்டு, மூளை அதிர்ச்சியடைந்தாலும், ஒரு விதத் தலைவலி உண்டாகும். ஆனால் முன் கூறிய தலைவலிகளைப் போல, அது அவ்வளவு வேதனை உண்டு பண்ணாது. குமட்டலும் வாந்தியும் இருக்கலாம். படுக்கையிலே அசையாமல் அமைதியாயிருந்து, சில நாள் பூரண ஓய்வு எடுத்துக் கொண்டால், சுகமாய்விடும்.

தலைவலிகளுக்குள்ளே ஒற்றைத் தலைவலி மிகவும் பிரபலமானது. அதன் பெயருக்கேற்ப, சிரசின் ஒரு பாரிசத்திலே அது உண்டாகும். ஒருபக்கத்துக் கண், நெற்றி, கன்னப்பொறி, பிடர்த்தலை, கழுத்து, வரையிலும் வரலாம். கத்தியினால் குத்தப்படுவது போலவும், ஆணியினால் கடையப்படுவது போலவும் இருக்கும். தலைவலிகளுக்குள்ளேயே மிகவும் உக்கிரமான தலைவலி இந்த வகை தான். இந்நோய் உள்ளவனுக்கு அடிக்கடி குமட்டலும் வாந்தியும் உண்டாகும். அல்லாமலும் கண் பார்வையைப் பற்றிய கோளாறுகளும் உண்டாகும். ஒவ்வொரு உருவமும் இரண்டு போலவும், ஆகாயத்தில் மின்னல் ஒளியுடன் மின்மினிகளை ஒத்த உருவங்களும் திருஷ்டியில் படும். சிலருக்கு உருவங்களை ஒரு குழாயின் வழியாகப் பார்ப்பது போலத் தோன்றும். இன்னும் கொட்டாவியும் மலபந்தமும் அதில் காணும். ஒற்றைத் தலைவலி பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ, ஒருமாதத்திற்கு ஒரு முறையோ, அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ, விட்டுவிட்டு ஒழுங்கான காலங்களில் உண்டாகும். சாதாரணமாக அது வருவதற்கு முன்னதாகவே, அது வரப் போகிறதென்று சிற்சில முற்குறிகளால் நோயாளி தெரிந்து கொள்வான். உதாரணமாக, சரீரம் மிகவும் சோர்வடையும், கொட்டாவி அதிகமாகும், கண் வெளிச்சத்தைப் பார்க்க இயலாமல் கூசும்.

பன்றி இறைச்சி, சாக்லட் முதலிய விரோத வஸ்துக்களை உண்ணுவதால் ஒற்றைத் தலைவலி உண்டாவதாகப் பல வைத்தியர்கள் கருதுகிறார்கள்.

புதிதாக ஹிஸ்டமைன் தலைவலி என்று ஒரு வித தலைவலிக்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் ஒற்றைத் தலைவலியைப் போல மிகவும் கடுமையானது, தலையின் ஒரு பாரிசத்திலே வருவது. கூடுதலாக, முகத்திலும் அதேபக்கத்திலே நோவு காணும். அந்தப் பக்கத்திலே தொட்டுப் பார்த்தால், இலேசாகச் சூடாக இருக்கும். அந்தப் பக்கத்துக் கண்விழி சிவந்து எரியும்; பக்கத்தின் நாசித் துவாரத்திலும் அநேகமாக நீர் வடியும். ஒற்றைத் தலைவலியைப்போல, ஹிஸ்டமைன் தலைவலியும் விட்டுவிட்டு ஒழுங்கான காலங்களில் வரக்கூடியது. ஆனால் அதை விட அடிக்கடி வரும்.

(5-ம் பக்கம் பார்க்க)

# விக்ளிப் ஒரு விடிவெள்ளி!

[தில்லை-வில்லாளன்]

உலகிலே சீர்திருத்தம் பிறந்து பல நூற்றாண்டுகளாகிவிட்டன. பல இடங்களில் குமரப்பருவமும் நீங்கி கிழப்பருவம் வரை வளர்ந்துவிட்டது. ஆனால், இங்கு இந்நாட்டில் கருவுயிர்க்கவே இல்லை!

நமது கண்களை உயர்த்திச் சற்று மேலே திறத்தினால் இமயம் தெரியும், அலையும் தாண்டினால் ஆசியாவைப் பார்க்கலாம், அதன் பக்கத்திலே ஐரோப்பாக் கண்டமிருக்கும். மேற்கத்திய நாடுகள். ஆங்கில ஆஸ்தானங்கள், வெள்ளைய வெளிகள் அங்குதானுள்ளன. அவர்கள் பிறந்த வரலாற்றை, வளர்ந்த கதைகளை, வாழ்ந்த சரித்திரத்தை, வாழும் நிலைமையைப் பார்க்கட்டும், படிக்கட்டும், படித்தவர் கூறக் கேட்கட்டும், நல்ல பாடம் கிட்டும். 'புதுமை' பிறக்கவில்லை இங்கு, அங்கு பிறந்து வளர்ந்துவிட்டது என்பதை உணரலாம்.

நம்மில் பலர் தேசபக்தியைமட்டும் வாங்கிக்கொண்டு, புத்தியையும் யுக்தியையும், சிந்திக்கும் சக்தியையும் விற்றுவிட்டு, யானையைப் பூனையாள்கிறதே, இது அடுக்குமா, அறிஞர் அவையில் எடுக்குமா, ஒப்புதல் உடை உடுக்குமா என்று ஒப்பாரி பாடி ஓலமிட்டு, ஓங்காரக் குரலின் இரைச்சலைக் குறைத்து ஓய்வு வேளைகளில் ஒய்யாரமாக, ஓ வெள்ளை வெளவாலே, கூட்டமாய் இங்கே வராதீர், சோ, சோ, என்று ஆலோலம் பாடுவதையும் நிறுத்தி, ஏறியிருக்கும் எட்டாத பரணையிலிருந்து இறங்கி வந்து சிந்திக்க மறுக்கிறார்கள். **அவர்கள் சிந்தனைக்கு மருந்து, சீர்திருத்தவாதிகளுக்கோர் விருந்து, இங்கு நடப்பது சீர்திருத்த வரலாறு!**

இதனைப் படிப்பவர்களுக்கு நமது நிலைக்குக் காரணம் என்னவென்று புரியும், தீமைகள் நம்மைவிட்டுப் பிரியும், கொடுமைகள் சரியும். இங்கு கூறப்படுவது கதையல்ல, உண்மை வரலாறு!

(1)

இன்று இங்கிருப்பது போல இங்கிலாந்திலேயும் ஒரு காலம் இருந்தது! எதை எவன் சொன்னாலும், இருக்கலாம், ஈசன் திருவிளையாடலை யாரறிவார் பராபரமே என்று நம்பியதுண்டு. அன்று மக்கள் அத்தகைய எண்ணத்தை, தங்கள் மனதில் கலக்கமும், கொடுமையும் கலந்தோடும் கவலைக்கடலில் நீந்திட ஓர் கலம் என்றும், மனவலைகளைக் கடந்து அமைதி புரியை அடைய ஓர் பாலம் என்று நம்பினர்.

நம்பினதோடு நிற்கவில்லை. நடைமுறையிலும் காட்டினர். கிருத்துவர்களுக்குத் தீராத வினைகளையெல்லாம் தீர்த்துவைக்கும் திருத்தலம், புண்ணிய பூமி, திவ்ய க்ஷேத்திரம். **ஜெருசலம்**. அதனை **அராபியர்கள்** பிடித்துக்கொண்டனர். அவர்கள் வழக்கமான வரிகளுடன் யாத்ரிகர்களைவிட்டுவிட்டனர். ஆனால் பதினொன்றாம் நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்ற துருக்கியர்களோ தங்கள் கொடிய செயல்களைத் தொடங்கினர், கிருத்துவர்கள் கொள்ளையடிக்கப் பட்டனர், கொடுமைக்காளாக்கப் பட்டனர், சிற்சில சமயங்களில் கொல்லவும் பட்டனர். இத்தகைய விபரீத விளைவுகள்பற்றிய விதவிதமான வதந்திகள் உலவின, கிலவின. ஆனால் அம்மதத்தைச் சேர்ந்த ஐரோப்பாவோ, இனவுணர்ச்சியும், எழுச்சிப் போக்கையுமிழந்து கிடந்தது. இனமென்பதின் பொருள் புரியாது ஆட்சி நடத்தியது. கிருத்துவ பூமியென்பதே பெயர், ஐரோப்பாவல்ல! மன்னர் மன்னன், மதகுருமார் என்ற இரு பிடிகளில் சிக்குண்டு, இவையிரண்டும் இருவாள்களென ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தது, ஒற்றுமை சரிந்தது, பிரெஞ்சும், ஸ்பெயினும், இதாலியும், ஜெர்மனியும் பிளவு நோயால் நொந்து உள்நாட்டுப் போர்ப் படுக்கையில் கிடந்தன. அப்படியிருந்தும் போப்பின் தூண்டுகோலால் **சிலுவையேந்தி மூன்று முறைகள் போரிட்டனர், பெரு வேகத்துடன்! பயபக்தியுடன் இப்போரைச் செய்தனராம், மதத்திற்காக!**

அத்துடன் விட்டனரா? மன்னன் **ஜான்** தனது மாநிலத்தையே மதத்தலைவனது காலடியில் வைத்து மண்டியிட்டு வேண்டினான். **போப் புனிதனுக்கு 1000 மார்க்குகள் அள்ளிக்கொட்டினான்.** நார்மண்டி நாட்டு **இராபர்ட்**டன் நாட்டையே சிலுவைப் போரில் ஈடுபடவேண்டி விற்றான். **தன் நாட்டையே ஏலம் விட்டான். அவ்வளவு மதபக்தி! மூன்றாம் ஹென்றி வரி வசூலித்தான், போப்புக்குக் காணிக்கை கட்ட!** இதுவும் ஒரு காலம் இருந்தது. ஆனால்.....!

(2)

இரு நூற்றாண்டுகளுக்குள் பெரிய மாறுதல்! காலச் சக்கரம் உருண்டு மதத்திற்கெனப் போரிடும் போக்கையும், நாட்டை விலை கூறிடும் நோக்கையும் துண்டித்தது, **ஜான் விக்ளிப்பைக்** கொண்டுவந்து நிறுத்தியது. மதத்தைத் தாக்குவதில் துணிந்து இறங்கியவர் விக்ளிப். இவர் யார்க்ஷையைச் சேர்ந்தவர். **ஆக்ஸ்போர்டில் பாலியல்** கல்லூரியில் ஆசிரியராயிருந்தார், நல்ல அறிவாளி, ஆராய்ச்சியாளர். இவரைப் பிரபல பெரும் பதவியாளர்கள்; பிரமுகர்கள்; பணக்காரர்கள்; அதே நேரத்தில் 'அன்னக்காவடிகள்' யாவரும் ஆதரித்தனர். அத்தகையவர்களில் **ஜான் ஆப் காண்ட்** மிகவும் சிறந்தவன். அவருடைய அரசியல் திட்டங்களை வகுத்துத் தந்தவர் விக்ளிப், அதை நிறைவேற்றி வைத்திடும் ஆயுதமும் அவரே!

அவர் பாதிரிமார்களின் பணத்திலும், பூவுலக போக்கியங்களிலும் பார்வையைச் செலுத்திடத் தொடங்கினார். குருமார்களின் வாழ்க்கையில் குறைகள் மலிந்திடக் காரணம், அவர்களின் பூவுலக ஆசைகள் என்பதனை எடுத்துக் காட்டினார். அவர்கள் ஏழ்மையிலும், எளிய வாழ்விலும் தங்கள் கடாட்சத்தை, கருணைப் பார்வையைச் செலுத்தியிருந்தால் இந்தக் கோளாறுகள் நேரிட்டிராதென்று கூறினார். எந்தப் பெயராலும் போப் பணம் வாங்க பைபிளில் இடந்தரவில்லையென்பதனை இடித்துரைத்தார். இதனையே சாஸர் என்பவர் கதைகளில் கூறியிருந்தார். ஆகவே, விக்ளிப்பின் பிரச்சாரம் வேகமாகப் பரவிற்று, விரிவுற்றது. இதைக் கண்ட ஆங்கிலநாட்டுத் தலைநகரான **இலண்டன்** மாநகரின் பாதிரி கோர்ட்டன் என்பவன் விக்ளிப்பை விசாரணைக்கு அழைத்திருந்தான்.

அவரை ஆதரிக்கும் ஜான் ஆப் காண்ட்டும் உடன் சென்றிருந்தான். பாதிரி குற்றஞ் சாட்டினன் பதட்டத்துடன்! அப்படியானல் உன் சிகையைப் பிடித்து எறிவேன் என்றான் உடன் சென்றிருந்த பிரபு. சொன்னது நடந்துவிட்டது, பெருங் குழப்பம்! அவ்வளவு தூரம், அங்கு, அன்று, 1377ல் மதசீர்திருத்த எண்ணம் ஆழப் பதிந்திருந்தது.

விக்ளிப் மேலும், மேலும் ஆராயத் தொடங்கினார். பைபிளையே ஆங்கிலத்தில் எழுதினார். அறிஞர் கரங்களிலிருந்த வேதம், அந்நாட்டிலிருந்த அனைவரது கரத்திலும் மாறிற்று. படிக்கத் தொடங்கினர், குறைகளைத் தாங்களாகவே உணர்ந்தனர், விழிப்படைந்தனர். வரவர அவரது கண்கள் பள்ளத்தில் பாயத் தொடங்கின. 'கிருஸ்துவின் உடலைத் தனதாக்கல்' என்று கூறிக் குருமார்கள் திராட்சை ரசத்தையும், ரொட்டியையும் வைத்துப் படைத்திடும் பழக்கத்தைத் தாக்கினார். ஆங்கில நாடே அலறியது, மருண்டது! ஜான் ஆப் காண்ட் ஓடோடியும் வந்து, வேண்டாம் இதுவென்று தடுத்தான், கல்லூரியும் வெளியேற்றிற்று, கலங்கினாரா? இல்லை. இருந்தால் அவர் சீர்திருத்த வாதியாகமாட்டார், நின்றபாடில்லை அவர், 'லாலர்டுகள்' என்ற ஒரு தொண்டர் படையை ஏற்படுத்தினார். அவர்கள் விக்ளிப்பின் கொள்கைகளைப் பட்டி தொட்டிகளில் பரப்பினர், ஏழை, எளியவர் மனங்களில் நிரப்பினர். ஆள்களுக்குப் பஞ்சமில்லை ஏன்? துன்பத்திலுழல்வோரும், கடன்பட்டோரும், குருமார்களின் கொடுமைக் கனலில் வெந்தோரும் விக்ளிப்பிடம் வந்து சேர்ந்தனர்! விக்ளிப் வைத்த வெடி.......குருமார்களின் வெறியாட்டங்களால் புதைந்து கிடந்த மக்கள் மனதில் வெடிக்க ஆரம்பித்தது, எல்லோரும் அதனை ஆவலுடன் வரவேற்றனர், போற்றினர் லாலார்டுகளின் பிரச்சாரமே குடியானவர் கலகம் என்றால் அதன் வேகத்தைக் கூறவும் வேண்டுமோ?

விக்ளிப் மாண்டார். அழியவில்லை. அவர்விட்ட விதை, வளர்ந்துகொண்டே இருந்தது. ஆங்கில முடியும், அவரிடம் கெடுபிடி செய்தது. ரிச்சர்டு தனது பணியாளர்களுக்குப் பாதிரிகளை யாதரிக்கவும், விக்ளிப்பின் எழுத்தோவியங்களை யழித்தொழிக்கவும், ஏழைக் குருமார்களான லாலார்டுகளைத் துன்புறுத்தவும் கட்டளையிட்டான், கல்லறையில் கேலி பேசினான்! பிறகு வந்த நாலாம் ஹென்றியோ, கி. பி. 1401-ல் லாலார்டுகளை எரித்திடவே சட்டமிட்டான் இச்சட்டத்தின் துணையினால் **வில்லியம் சாவ்டர்** எரிக்கப்பட்டார், இன்னும் பலர் இக்கதியடைந்தனர். **சர் ஜான் ஓல்ட்காஸில்** ஓர் சிறந்த அறிவாளி. அவர் விக்ளிப்பைப் பின்பற்றுபவர். ஒரு பெரிய புரட்சிக்கு வித்திட்டார், அம்முயற்சி கருவிலேயே சிதைந்தது. அங்கு அவர்கள் எரிக்கப்பட்டார்கள், கரியாக்கப் பட்டனர், சாம்பராக்கப் பட்டனர், ஆனால் அவர்கள் மனம் வேகவில்லை, எண்ணம் இறக்கவில்லை, புது வடிவு கொண்டது புதுவலிவுண்டது! அங்கு அந்த அறிவாளிகளா எரிந்தார்கள்? அறிவு எரிந்தது. ஆராய்ச்சி எரிந்தது, ஏனென்றிடும் மனப்பாங்கு எரிந்தது! அறிவு, மரமல்லவே கரியாக, மாற்றுக் குறையா தங்கமாயிற்றே! புது பளபளப்பும் பொலிவும் பொங்கிவழிந்தது அவர்கள் அக்னியிலே மடிந்தனர், அவர்கள் கொள்கையோ வெற்றிபுற்றது, சிறிது காலம் சென்றாலும்!

இங்கிலாந்து மக்களின் மனம் பண்படவில்லை. அவர்கள் அன்று பொருளைப் போப்புக்களிக்கத் தயங்கினர், புதுமையை நாடவில்லை தேடவில்லை, ஆனால் விக்ளிப் மட்டும் 'புதுமைவருது பராக்' என்று கட்டியம் கூறிடும் **விடி வெள்ளியானார்**. வெள்ளி முளைத்தபின் விடியாது, போகுமா போனதுண்டா? அப்படி விடியாதுபோனால் அது விடி வெள்ளியாகுமா. விக்ளிப் வைத்த வெடி பிளக்காத பெரும் பாறைகளைப் பிளந்துவிட்டது. கொஞ்சநாள் பிடித்தது, அவ்வளவுதான்! ஆனால் அவர் விவேகிகள் கரத்திலிருந்த வேதத்தைக் குருமார்களின் வேலையை விளக்கிடும் வகையில், அழகான ஆங்கிலம், அறைந்து சொல்லும் நடை, எளிதில் புரியும் முறை இவற்றுடன் இணைத்துத்தந்தார், எவர் எதைச் செய்தாலும் ஏன் என்று கேட்கத் தூண்டினார், மறைந்தார், அவருடைய மாண்புடைக் கொள்கைகள் மாளவில்லை.

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மூக்கைச் சுற்றியுள்ள எலும்புகளிலே அவடிகள் என்னப்படும் சில சின்னக் குழிகள் இருக்கின்றன. அவற்றில் எக் காரணத்தினாலாவது அழற்சி ஏற்பட்டாலும், தலைவலி சம்பவிக்கும். ஆனால் இந்த வலியின் தன்மையும், அது உண்டாகும் இடமும், சம்பந்தப்பட்ட அவடி இருக்கும் இடத்தைப் பொறுத்தது. உதாரணமாக, இரண்டு நெற்றி எலும்புகளிலும் கண்ணுக்கு நேர் மேல்புறமாக ஒவ்வொரு அவடி இருக்கிறது. அவைகளின் அழற்சியினால் தோன்றும் தலைவலி வலது கண்ணிலோ அல்லது இடது கண்ணிலோ அல்லது இரண்டிலும் உணரப்படும். கன்ன எலும்புகளிலுள்ள அவடிகளின் வேக்காட்டினால் உண்டாகும் தலைவலி அந்தப் பிரதேசத்தில் மட்டுமே தெரியும். ஆனால் நாசிக்குச் சற்று மேலேயுள்ள ஆப்பெலும்பின் அவடிகள் அழன்று கொண்டால், வேதனை சாதாரணமாகத் தலை மண்டை முழுவதும் வியாபித்திருக்கும். சில சமயங்களிலே அந்த வேதனை மிகவும் ஆழமாக இருப்பது போலத் தோன்றும். அவடிகளின் அழற்சியினால் ஆன எல்லாத் தலைவலிகளுமே விட்டு விட்டு வரும் தன்மையுடையன. பெரும்பாலும் காலையிலேயே அவை வரும். ஏற்றவாறு சிகிச்சை செய்து, அழற்சியைப் பரிகரித்துக் கொண்டால், தலைவலியும் தானாகவே குணமாய்விடும்.

கண்களின் களைப்பினால் பிறக்கும் தலைவலி பெரும்பாலும் தலையின் முன்பாகத்திலேயே காணும். கண்களுக்குப் பின்னாலேவலி அதிகமாக இருக்கும். தலைவலிப்பதோடு கூட, கண் கூசுதல், கண்ணில் நீர் வடிதல், எழுத்துக்கள் சரியாகப் புலப்படாமை ,சில வேளை வயிறு குமட்டுதல் என்னும் இக் குணங்களும் இருக்கும். வலி சாதாரணமாகச் சாயங்காலத்திலேயே காணும். நெடு நேரம் வாசித்தாலும் வலிக்கலாம். பொதுவாக எட்டப் பார்வையிலே தான் தலைவலி உண்டாகும்; கிட்டப்பார்வையிலே உண்டாகாது.

பெண்களுக்குத் தீட்டு வருதல் ஏறக்குறைய நாற்பத்தைந்தாம் வயதிலே நின்று போகும். அவர்கள் வாழ்க்கையிலே இது ஒரு முக்கியமான கட்டம். இக்கட்டம் நெ

(10-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 மார்கழி 17
7—1—50 சனிக்கிழமை


## கட்டாயக் கலப்புமண மசோதா ஒரு யோசனை !

"ஜாதி ஒழியவேண்டும்—ஒழிந்தால்தான் நாடு நலமுறும், மக்கள் வாழ்விலும் இன்பம் எக்களிக்கும்" என்ற உண்மையை மறுத்துப் பேசுபவர்கள் இந்நாளில் யாரும் இல்லை. எழுத்துச் சிற்பிகளானாலும், சொற்பொழிவு மன்னர்களானாலும், சிறுகதை வரைபவர்களானாலும் சினிமாக் கதைகள் தீட்டுபவர்களானாலும், அரசியல் தலைவர்களானாலும் சமுதாய சீர்திருத்தவாதிகளானாலும், அவர்கள் அத்தனை பேருமே ஏகமனதாக ஒப்புக்கொள்ளும் ஒரு சீர்திருத்தம் ஜாதி ஒழிப்பு என்பது. ஜாதி—ஆம்! அதுதான் நம்மிடையே உள்ள பேதங்கட்கெல்லாம் ஆதி தாய் என்பதையும், ஜாதி என்ற விஷ விருட்சம் பெயர்த்துத் தள்ளப்பட்டால்தான் சமுதாயத்திலே வீசும் பேதம் என்ற விஷவாடை தொலையும் என்பதையும் எடுத்துப் பேசி விளக்கம் கூறாத முற்போக்குவாதிகளைக் காண்பது அரிது. ஜாதி பேதங்களை ஒழிப்பதற்காகவென்றே கூட்டப்பட்ட மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், சங்கங்கள், விழாக்கள் ஆகியவை எண்ணற்றவை. அழித்தே தீருவோம் சாதிச் சனியனை என்ற வீரமுழக்கத்தை எழுப்பிய சொற்பொழிவாளர்களும் எண்ணற்றோர். நாடாளவந்துள்ள நமது அருமைக் காந்திய மந்திரிகளும் கூட, சாதிச் சிக்கலை அறுத்தெறிவதுதான் நமது முதற்பணி என்று அடிக்கடி பேசிவருகின்றனர். ஜாதி ஒழிப்பு என்ற 'தாரக மந்திரத்தை' இத்தனை பேரும் முழக்கியும்கூட, ஜாதி, இன்னமும், இன்றளவும், தன்னுடைய செங்கோலை ஜாமஜாம்மெனச் செலுத்திய படிதான் இருக்கிறது. அதன் ஆதிக்கமோ, ஆற்றலோ, ஆவேசப் போக்கோ, இருப்புப் பிடியோ, சிறிதளவும் தளர்ச்சியடையக் காணோம். ஜாதி ஒழிப்பு என்ற பிரச்சினை வெறும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் இருக்கும் வரை, ஜாதி ஒரு போதும், ஒழியாது. உண்மையிலேயே ஜாதி ஒழிய வேண்டுமானால், சட்டம் அந்தப் பணியை மேற்கொண்டாக வேண்டும். யார் ஒருவரும் தம்தம் சாதியிலே திருமணம் செய்து கொள்ளக் கூடாது. —வேற்று சாதியிலே கட்டாயம் மணம் செய்து கொண்டாக வேண்டும். —இல்லையேல் சிறைவாசம் என்ற நிலை ஏற்பட வேண்டும். அதாவது கட்டாயக் கலப்புமண மசோதா ஒன்று சட்டசபையிலே கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டும். கனம் பொருந்திய நமது காங்கிரஸ் அமைச்சர்கள், நாட்டு நலனுக்கேற்ற நல்லதோர் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் சிறிதேனும் அக்கறை கொண்டவர்களாய் இருந்தால், அவர்கள் உடனடியாகச் செய்யவேண்டிய பணி, இத்தகையதோர் மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதே யாகும். சர்க்காருக்கு அதிகச் சிரமம் இருக்கக்கூடாது என்பதற்காக, நாம், இங்கே, சட்டசபையிலே உறுப்பினர்களாக இல்லாத — ஆனால் அங்கே இருப்பவர்களைவிட நாட்டு நலனிலே அதிக அக்கறையும் அன்பும் படைத்த நம் நண்பர்கள் சிலரால் தயாரிக்கப்பட்ட கட்டாயக் கலப்புமண மசோதா ஒன்றைக் கீழே தந்திருக்கிறோம். இது, தமிழர்களுக்காக மட்டும் என்று தயாரிக்கப் பட்டிருக்கிறது. இதனை, திராவிடர் அனைவருக்கும் ஏற்றபடியாகத் திருத்திக் கொள்வது கடினமான செயலன்று. ஜாதி ஒழிய வேண்டும் என்பதிலே ஆட்சியாளர்களுக்கு உண்மைக் கவலை இருக்குமானால், இந்தமசோதாவை, ஏற்ற திருத்தங்களுடன் நிறைவேற்றி வைக்கலாம். வைப்பார்களா? அவ்வளவு நெஞ்சுஉரமும் சீர்திருத்த நோக்கமும் ஆட்சியாளர்களுக்கு இருக்குமா? எதிர் பார்க்கலாமா?

---

## கட்டாயக் கலப்புமண மசோதா

### பாயிரம்

தற்காலத் தமிழர் சமூக வாழ்க்கையை அடியோடு மாற்றிப் புது முறையில் அமைக்க வேண்டியும், ஜாதி வேறுபாடற்ற சமூகத்தைப் படைக்க வேண்டியும், அரசியல் சமூக வாழ்க்கையில் இன்பமும் ஒருமைப்பாடும் மிளிர வேண்டியும் கீழ்க்கண்டவாறு இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் படுகிறது.

### முதற் பாகம்

பிரிவு 1

(1) இம்மசோதா, 'கட்டாயக் கலப்பு மண மசோதா" எனப் பெயர் பெறும்.

(2) தமிழ்நாடு முழுவதுக்கும் இச் சட்டம் பரவி நிற்கும்; 'தமிழர்' எல்லோரும் (ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, குடியேற்ற உரிமை பெற்றவர் உள்பட), இச் சட்டத்திற்கு உட்பட்டவராவர்.

(3) 1950-ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் முதல் இச் சட்டம் அமுலுக்கு வரும்.

பிரிவு 2

பிரயோக அநுபவங்களில் முரண்பாடு ஏற்பட்டாலன்றி, மற்றப்படி இச் சட்டத்தில் கீழ்க் காணப்படுபவை பின்வருமாறு பொருள் கொள்ளப்படும்.

(1) 'ஜாதி' என்பது இத்துடன் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு 1-ல் தொகுக்கப்பட்டுள்ளபடி, சமய இன வேறுபாடில்லாமல் மக்கள் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு ஜாதிப் பிரிவினையாகும்.

(2) இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் இணைப்பு 1-ல் கண்ட தொகுப்புகளுள் இரண்டு வேறுபட்ட தொகுப்புகளைச் சேர்ந்த இருவர் ஆணும், பெண்

னும் செய்து கொள்ளும் வாழ்க்கை ஒப்பந்தமே கலப்பு மணம் என்று கருதப்படும்.

(3) அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு, இச் சட்டத்தின் ஷரத்துகளை நிறைவேற்றும் முழு அதிகாரமும் பெற்ற ஐந்து அங்கத்தினரைக் கொண்ட குழுவே "மத்தியக் கழகம்" எனப்படும்.

(4) 'இணைப்பு' என்பது இச் சட்டத்தின் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது.

## இரண்டாம் பாகம்

பிரிவு 3

திருமணத்திற்குரிய வயதடைந்த ஒவ்வொருவரும் (1929-ஆம் வருஷத்திய 19-வது சட்டமாகிய குழந்தை மணக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி ஆணுயின் 18 வயதிற்குக் குறையாமலும், பெண்ணுயின் 14 வயதிற்குக் குறையாமலும் இருக்க வேண்டும்) — ஆணே பெண்ணே திருமணம் செய்து கொள்ள விரும்பினால் இச் சட்டத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள கமூனு 1-ல் மத்தியக் கழகத்திற்குக் குறைந்தது திருமணத்திற்கு 30 நாளைக்கு முன்னரே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

பிரிவு 4

மேல் கூறிய 3-வது பிரிவின்படி விண்ணப்பிக்காமலோ, மத்தியக் கழகத்தின் அங்கீகாரம் பெருமலோ எவருமே திருமணம் செய்து கொள்ளக்கூடாது.

## மூன்றும் பாகம்

பிரிவு 5

இச்சட்டத்தோடு சேர்த்துள்ள இணைப்பு 1-ல் இருக்கும் ஒரே தொகுப்பைச் சேர்ந்துள்ள இருவர் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

பிரிவு 6

இச் சட்டத்தின் ஷரத்துகளின்படி ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டவர்களின் மக்களை இச் சட்டம் பாதிக்காது.

## நான்காம் பாகம்

பிரிவு 7

விண்ணப்பதாரர்கள் இரண்டு வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களா இல்லையா என்பதைப் பற்றி இந்தச் சட்டத்தின்படி அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள மத்தியக் கழகமே முடிவான தீர்ப்பளிக்கும்.

பிரிவு 8

விண்ணப்பதாரர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்பது 1941-ஆம் வருஷத்திய ஜனத்தொகைக் கணக்கெடுத்த போது செய்து கொண்ட விண்ணப்பத்தில் கண்ட ஜாதி விவரங்களின்படி முடிவு செய்யப்படும்.

பிரிவு 9

'உண்மைக் காதல்' என்று மத்தியக் கழகத்தார் முடிவு செய்தால் ஒரே ஜாதியிலோ அல்லது கிளைச் சாதியிலோ திருமணம் செய்து கொள்ள அநுமதியளிக்கலாம்.

## ஐந்தாம் பாகம்

பிரிவு 10

இச் சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சொத்துரிமை அளிக்கின்றது.

## ஆறும் பாகம்

பிரிவு 11

எந்தக் கல்வி ஸ்தாபனத்திலும் இருபாலருக்கும் சம எண்ணிக்கையுள்ள இடங்கள் கொடுக்கப்படும் வரையில் மாணவர்களைச் சேர்க்க மறுக்கக்கூடாது.

## ஏழாம் பாகம்

### விவாகரத்து உரிமை

பிரிவு 12

திருமணம் செய்து கொண்டவருள் எவரேனும் விவாகரத்து விரும்பினால், ஆறு மாத முன்னறிவிப்போடு விண்ணப்பித்து அந்த உரிமைபெற இச்சட்டம் அனுமதிக்கிறது. விவாகரத்துச் செய்தவர்கள் மறுமணம் செய்துகொள்ள விரும்பினால், ரத்து அங்கீகாரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதம் கடந்த பிறகே விண்ணப்பிக்கலாம்.

## எட்டாம் பாகம்

பிரிவு 13

இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு எதிரிடையாகத் திருமணம் செய்துகொள்ளும் யாதொரு ஆணோ பெண்ணோ இந்தச் சட்டத்தின்படி, அவர்களுடைய பரம்பரைச் சொத்தை அரசாங்கத்தார் பறிமுதல் செய்தலாலோ, மூன்று வருஷகாலம்வரையில் நீடிக்கக் கூடிய கடுங்காவலாலோ, மூவாயிரம் ரூபாய்வரையில் செல்லக் கூடிய அபராதத்தாலோ அல்லது இவை எல்லாவற்றாலோ தண்டனை விதிக்கப்படுவார்கள்.

பிரிவு 14

இந்தச் சட்டத்தின் ஷரத்துகளுக்கு எதிரிடையாகத் திருமணம் செய்து வைத்தாலும், சடங்குகளை நடத்தினாலும், திருமணம் நடப்பதற்கு உடந்தையாய் இருந்தாலும் அத்தகைய திருமணம் நடக்கும் போது தடுக்காமல் கவனக்குறைவாக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு வருஷம்வரையில் நீடிக்கக் கூடிய கடுங்காவலோ அல்லது ஓராயிரம் ரூபாய்வரையில் செல்லக்கூடிய அபராதமோ அல்லது இவ்விரண்டுமோ ஆன தண்டனை விதிக்கப்படலாம்.

பிரிவு 15

இந்தச் சட்டத்தின்படி மத்தியக் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இந்தச் சட்டத்தை மீறி நடப்பவர்கள்மீது நடவடிக்கைகளை பிராது வந்தாலும் வராவிட்டாலும், எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## இணைப்பு

1

**பிராமணர்**

இன்னும் மத்தியக் குழுவினர் முடிவின்படி சேர்க்கப்படும் கிளை இனமோ கிளை ஜாதியோ.

2

**வேளாளர்**

பிள்ளை, முதலியார், வெள்ளாளச் செட்டியார், கவுண்டர், யாதவர் இன்னும்......

3

**செட்டியார்**

பேரி செட்டியார், நாட்டுக்கோட்டையார், கோமுட்டிச் செட்டியார் இன்னும்......

4

**நாயுடு**

நாய்க்கர், நாயகா, ராஜா—ராஜூ, ரெட்டியார் இன்னும்......

5

**விசுவகர்மர்**

ஆச்சாரி (ஆசாரி), கருமான், கன்னான் இன்னும்......

6

**முக்குலத்தோர்**

மறவர், கள்ளர், அகமுடையார் (அகம்படியார்) இன்னும்......

7

**நாடார்**

இன்னும்......

8

குயவர், சலவைத் தொழிலாளர், நாவிதர், இன்னும்......

9

**ஹரிஜனங்கள்**

பஞ்சமர், பறையர், குறவர், சக்கிலியர் இன்னும்......

10

கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் தங்களுக்குள் மணம் செய்து கொள்ளலாம்.

# சென்னை யாருடையது — ஒரு கேள்வி

[கோவைக்கிழார்]

“சென்னை யாருடையது?” என்ற கேள்வி இப்போது கேட்கப் படுகிறது. இந்தக் கேள்வி காதில் பட்டவுடனே தமிழர் வெட்கப்பட வேண்டும். பதினைந்து ஆண்டுகளின் முன்பு இந்தக் கேள்வி எவருடைய வாயிலாவது வந்ததா? இப்போது ஏன் கேட்கப் படுகிறது? கேள்வி ஒன்று, பெருமுயற்சிகளும் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. சிறிது கவனிக்க வேண்டாமா? இன்னும் உறக்கமா?

ஆந்திரர்கள் சென்னையைத் தங்களுடையது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். எதிர்ப்பு வந்ததினால் சமாதானமாய்ப் போவதாகச் சொல்லி, நகரத்தை இரண்டு கூறு ஆக்கிக் கூவத்திற்கு வடக்கே உள்ளதைத் தங்களுக்கு விட்டுவிட வேண்டும் என்று கூறுகிறார்கள். ஒரு குழந்தைக்கு இரண் தாய்மார்கள் உரிமை பாராட்ட, நீதிபதி அக்குழந்தையை அறுத்து ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு பகுதியை எடுத்துக் கொள்ளும்படி சொல்ல, உண்மைத்தாய் கண்ணீர் விட்டுக் குழந்தையை மற்றவளுக்கே கொடுத்துவிடும்படிச் சொன்னதாக ஒருகதை உண்டு. அதைப்போலவே சென்னையும் ஆகவேண்டுமா?

இப்போது ஆந்திரர்களுடைய பேராசை மிதமிஞ்சிப் போகின்றது. பத்துக் கேட்டால் ஒன்று கிடைக்கும் என்ற கொள்கையோ தெரியவில்லை. நேற்றுக் காஞ்சியையும் தொண்டை நாட்டையும் தங்களுடையது என்று ஒரு சரித்திர ஆசிரியர் எழுதத் தொடங்கி விட்டார். “சுவதந்திரம்” என்ற ஆந்திரக் கொள்கை கொண்ட ஒரு ஆங்கில வாரத்தாளில், “பல்லவர்கள் தெலுங்கர்களே” என்ற கருத்தை இட்டு ஒரு கட்டுரை வெளிவந்துளது. அதன்படி தொண்டை நாட்டுக் காஞ்சி மன்னர்களான பல்லவர்கள் ஆந்திரர்கள் என்றும், ஆந்திர நாட்டிலிருந்து சிற்பக் கலையும் முதிர்ந்த நாகரிகத்தையும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்தார்கள் என்றும், காஞ்சி என்ற பெயரும் தமிழ் இல்லையென்றும், அழகிய ஆலய நிர்மாணம் வடக்கேயிருந்து கொண்டுவரப் பட்டதென்றும், தமிழருக்கு எழுத்து வடிவமும் அவர்களே தந்ததென்றும் கூறப் பட்டுள்ளது. ஆகவே சென்னைக்கு தெற்கேயும் ஆந்திர உரிமை உண்டு என்று அது வற்புறுத்துகிறது. இனி உண்மை ஆதாரங்களை தமிழ் மக்கள் எடுத்துக் காட்டி இதனை மறுக்க வேண்டாமா?

சென்னை தமிழர்களுடையது என்று காட்டுவதற்காகும் கருத்துக்களில் நுட்பமானவைகளை விட்டுவிட்டுப் பெரும்படியான சிலவற்றை மட்டும் இங்கே கூறுவோம். அவ்வாறு கூறும்போது ஆந்திரர்கள் வலுவான ஆதாரங்கள் என்று கூறும் சிலவற்றை மறுத்துச் சொல்லுவோம். “மூந்நூறு ஆண்டுகளுக்கு முந்தி சென்னைப் பட்டினத்தை தெலுங்குச் சிற்றரசன் ஆங்கிலருக்கு அளித்தான். அதற்கு அவன் தகப்பன் சென்னப்ப நாயக்கன் பெயர் இடப்பட்டது. அதில் குடியேறி ஆங்கிலருடன் வாணிபம் செய்தவர்கள் தெலுங்கர்களே. அதுகொண்டு சென்னையில் ஆந்திர முதலீடு பெரும்பான்மையாக வந்தது. ஆகவே சென்னையின் தற்கால உயர்வுக்கு ஆந்திரர்களே காரணம். இக் காரணங்களினாலே “சென்னை ஆந்திரர்களுக்குச் சேர்ந்தது” என்பதே ஆந்திரர்களுடைய வாதம்.

ஒரு நாட்டின் பகுதியை ஆளும் ஒரு சிற்றரசனுடைய தாய்மொழியைக் கொண்டு அப்பகுதியின் பொதுமொழியை நிர்ணயம் செய்தல் சரியன்று. அப்படியாயின் தெலுங்கு நாயக்கர்கள் ஆண்ட தஞ்சை, மதுரை முதலிய பிரதேசங்கள் தெலுங்கு நாடுகளே ஆகும். மராட்டியர் ஆண்ட சோழவள நாடு மராட்டியருடையதே. ஆங்கிலராளும் இலங்கை எப்போதும் ஆங்கிலருடையதே. நமது நாட்டை ஆண்டுவந்த ஆங்கிலர் அதனைத் தமதென்று கோருதல் ஆகாதா? அப்படியாயின் அவர்களை ஏன் வெளியேறச் சொன்னார்களோ? நிஜாமுக்குச் சேர்ந்த, ‘தெலிங்கானா’ அவனுடையதாகையால் ஏன் அதனை ஆந்திரநாட்டிற்குள் சேர்க்கவேண்டும் என்று ஆந்திரர்கள் உரிமை பாராட்டவேண்டுமோ? உண்மையில் அரசனுடைய தாய்மொழியைக் கொண்டு ஒரு நாட்டு மொழியை நிலைநிறுத்தல் கூடாது.

சென்னையை ஆங்கிலர் கைவசப் படுத்திக் கொண்டபோது ஏதோ கடற்கரையில் இருந்த ஒரு பகுதி நிலத்தை மட்டும் எடுத்துக்கொண்டார்கள். அதிலே கோட்டை கட்டி வியாபாரத்திற்காக தொழிலாளர்களைக் குடியேற்றி ஒரு பேட்டையும் கட்டினார்கள். இவர்களில் நெசவு முதலிய தொழில் செய்தவர்கள் செங்கல்பட்டு, நெல்லூர் முதலிய இடங்களிலிருந்து வந்த தெலுங்குத் தொழிலாளர்கள். உண்மை ஆந்திர நாடாகிய வட சர்க்கார் ஜில்லாக்களிலிருந்து ஒருவரும் வரவில்லை. வாணிபம் செய்யவந்த குடிகள் பேரி செட்டியார்களான தமிழர்களே. மற்றையோர் தமிழ் வன்னியர்களே. இவர்கள் பெயர்கள் தூயதமிழாவதை தம்புசெட்டித்தெரு, லிங்கிசெட்டித்தெரு, பெத்தநாயக்கன் பேட்டை முதலிய பெயர்களில் காணலாம். ஆகவே பட்டினம் பெருகுவதற்குத் தமிழ் நாட்டுத் தெலுங்கர்களும் தமிழர்களுமே காரணம் ஆவார்கள். இதனை நன்கு அறியவேண்டும்.

ஆங்கிலர் வந்த காலத்தில், பட்டினப் பகுதியைத் தவிர வேறு பகுதிகள் தனித் தமிழர்கள் குடியிருந்த பகுதிகளே ஆகும். ஊர்களின் பெயர்களே அக்காரணத்தை நிரூபிக்கும். திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், எழும்பூர், புரசைப்பாக்கம், சூளை, நுங்கம்பாக்கம், பிரம்பூர், திருவட்டீசுவரன் பேட்டை, சேப்பாக்கம், வண்ணாரப்பேட்டை, தண்டையார் பேட்டை, குறுக்குப் பேட்டை முதலிய பெயர்கள் தனித்தமிழ்ப் பெயர்கள் என்று அறிக. இவைகளும் பின்னால் சேர்ந்து பெருநகரமாயிற்று அல்லவோ. ஆகவே ஆந்திரம் எங்கு வந்தது?

வட நாட்டு ஆந்திரர்கள் சென்று ஐம்பது ஆண்டுகளாகத்தான்

சென்னையில் குடியேறியுள்ளார்கள். இவர்கள் உத்தியோகப் பேராசையினாலும் பணப்பேய் பிடித்தும் சென்னைக்குள் வந்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் சென்னை ஆந்திரம் ஆகும் பட்சத்தில், அதுவன் மார்வாடிநாடு ஆகக் கூடாதோ? இப்போது சென்னையில் எத்தனை மார்வாடிகள் பணம் விதைத்துச் செடியாக்கிக் காய்பறிக்கிறார்கள். கணக்கிட்டுப் பாருங்கள். ஒரு நாட்டு மொழி நிலைத்த குடிகளின் பேச்சாலறிய வேண்டுமே ஒழிய குடியேறிவரும் மக்களால் அறியக்கூடியதல்ல. பொதுவாகச் சென்னைத் தெருக்களில் நடந்துபோய்ப் பாருங்கள். தமிழ் பேசினால் எப்படிப்பட்டவனும் அறிந்துகொள்ள முடியும். தெலுங்கு பேசினால் சில பகுதிகளில் அறிந்துகொள்ளுவார்களே ஒழிய எல்லோராலும் அறிந்துகொள்ளக்கூடும் என்று கூறமுடியாது. இதுவே நல்ல சான்று என்று சொல்லக்கூடும். மேலும், ஆந்திரர் பேசும் நீண்டதும் கடுமையுமான உச்சரிப்பு சென்னைத் தெலுங்கர்களாலும் பேச முடியுமா?

சென்னையைச் சுற்றியுள்ள ஊர்களில் என்ன பேசுகிறார்கள். அவ்வூர்களின் பெயர்களைக் கூர்ந்து பாருங்கள். சிறப்பாக வடபுறத்தில், 'செம்பியம், மாதார்ப்பாக்கம், திருவொற்றியூர், எண்ணூர், ஞாயிறு, மீஞ்சூர், அத்திப்பட்டு, மாப்பட்டு, அறுப்பப்பட்டு, பொன்னேரி, பழவேற்காடு, திருப்பாலைவனம், இறுக்கம், புழலேரி, சோழபுரம், திருக்கள்ளில், காரிக்கரை முதலிய ஊர்கள் எல்லாம் தமிழ் மயமே. தமிழ்நாட்டின் நடுவில் ஆந்திரம் எப்படி முளைத்தது?

சென்னைப் பொதுமக்களின் பழக்க வழக்கங்கள், பண்டிகைகள், சமய நிலையங்கள், வழிபாடுகள், பாடசாலையில் வழங்கும் மொழி, பண்டகசாலை மொழி, தொழிலாளர் பேச்சு, காய்கறிகளின் வகைகள், உண்டு சமைக்கும் முறைகள், நடையுடை பாவனைகள் முதலிய விபரங்கள் எல்லாம் பெரும்பான்மையாக எம்மொழியைக் காட்டுகின்றன? கூர்ந்து ஆராயின் தமிழ் மயமே தோன்றும்.

சென்னையிலும் சுற்றிலுமுள்ள நாட்டிலும் தோன்றிய பெரியார்கள் எந்த மொழி பேசினார்கள்?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நாட்டு மண்டலங்களைப் பிரித்து அரசர்கள் ஆண்ட காலங்களில் தொண்டை மண்டலத்தைத் தமிழ் நாடாகவே கொண்டார்கள். அதற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முந்தி மூவர் சமயாசாரியர்கள் சென்னையைச் சுற்றித் திருக்காயத்தி வரை உள்ள தொண்டை நாட்டுத் தலங்களைத் தமிழ் நாட்டுத் தலங்களாகவே பாடியுள்ளார்கள். அவ்வாலயங்களில் தேவாரமாகிய தமிழ் மறை ஓதப் படுவதும் தமிழ் ஆதிசைவர்கள் பூசிப்பதும் காணத்தக்கவை.

இந்தப் பெரும்பான்மையான காரணங்கள் வெளிப்படையாகத் தோன்றுபவை. இவைகள் விளக்கமாக இருந்தும், மயிர் இழையைப் பிரித்துக் காரணம் காட்டுவதைப்போன்று ஆந்திரர் செய்யும் தருக்க வாதத்தால் யாதொருபயனும் இல்லை. ஆகவே இந்த எதிர்ப்பு முயற்சியில் நமது தமிழ் மக்கள் ஈடுபட்டு சென்னைப் பெரும்பதியை இழந்துவிடாமல் காத்துக்கொள்வார்களாக!


## நீங்கள் தவறாது படிக்க வேண்டியவை.

| | | |
|---|---|---|
| தேவலீலைகள் (C. N. A.) | 0 | 8 |
| வால்காவிலிருந்து கங்கைவரை | 5 | 0 |
| பெண்களுக்குச் சம உரிமை | 0 | 12 |
| அண்ணாபேச்சு வெற்றி ரகசியம் | 0 | 3 |
| அண்ணாவின் அறிவுரைகள் | 0 | 3 |
| களஞ்சியம் (நெடுஞ்செழியன்) | 0 | 8 |
| விடியுமா (நாடகம்) | 1 | 0 |
| பெண்களை நம்பலாமா | 0 | 4 |
| கள்ளக் கோழி | 0 | 8 |
| கற்பா காமமா | 0 | 4 |
| காதல்புரிவது எப்படி | 0 | 6 |
| துடிப்புள்ள இளைஞன் | 0 | 4 |
| திராவிடநாட்டுப் பிரிவினைப் பாடல்கள் | 0 | 6 |
| கொடு கல்தா | 0 | 8 |

தபால் செலவு தனி

**பகுத்தறிவுப் பாசறை,**
147, பவழக்காரத்தெரு,
சென்னை 1.

மத்திய திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக
13—1—50 வெள்ளிக்கிழமை
இரவு 10-மணிக்கு
**ஈரோடு அர்ச்சுனன் அரங்கில்**

# சந்திரமோகன்

கதை-வசனம்: அறிஞர் அண்ணாதுரை. M.A.,

சரிதம் தழுவிய, புதிய அம்சங்கள் நிறைந்த
**நாடகம் நடைபெறும்**
அறிஞர் C. N. அண்ணாதுரை, K. R. ராமசாமி,
E. V. K சம்பத், மற்றும்
K. R. R. நாடகக் குழுவினர்
நடிப்பார்கள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தை, இவரையும் இசைப்புலவரான என் தந்தையையும் இரு கண்களைப்போல் பாவித்து வந்தார். அரச அவையில் இவர்கள் இருவர்க்கும் நல்ல செல்வாக்கு இருந்தது.

முகிலன் படைத்த சிலைகளில் அரசி உள்ளத்தைப் பறிகொடுத்தாள். சிலைகளின் அழகில் சொக்கினளே அன்றி, சிலை வடிவமைத்த சிற்பியினிடத்தில் அல்ல! கலையைக்கண்டு மகிழவே இராணி அடிக்கடி முகிலன் இல்லத்திற்கு வரலானாள். பொறாமைக் குணம் கொண்ட கப இனத்தையே சேர்ந்த சூழ்ச்சிக்காரர்கள் பலிபீடம் தயாரித்தனர்! அரசியாரின் கற்பிற்கு களங்கம் கூறப்பட்டது! அரசர் சினந்தார். என்தந்தை முகிலனுக்காக வாதாடினார். முடிவு முகிலன் காட்டிற்கும், என் தந்தை பாண்டிய நாட்டிற்கும் செல்லலாயினர்!

என் தந்தையின் தோழர் முகிலன் என்பதை அறிந்ததும், அவரிடம் எனக்கு அளவுகடந்த அன்பும் மரியாதையும் ஏற்பட்டது! அவருக்கும் அதே போல்!

நாங்கள் இருவரும் பற்பல செய்திகளைப் பற்றிப்பேசினோம். விஷக்கன்னி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஐயா! சேரநாட்டை ஆரியரிடமிருந்து எப்படியாவது மீட்க வேண்டும்! மதக் குருவிற்குநல்ல பாடம் கற்பித்து நாட்டை விட்டு விரட்ட வேண்டும், அவனையும் அவன் இனத்தாரையும்! உங்களின் உதவி எனக்கு வேண்டும்!" என்று நான் கூறியதைக் கேட்ட விஷக்கன்னி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று அதட்டிக் கேட்டேன்!

"நான் ஒருவள் இருக்கும் போது, மற்றவர் உதவி உமக்கேன்?" என்று ஒய்யாரமாய்க் கூறி அருகே நகர்ந்து வந்தாள்!

"உண்மைதான்! உன் உதவியே போதும்! கடவுள் கோபித்து, காவலனின் போர் வீரர்களைக் கொன்றார், என்று மதத் குரு கூறின பொய்யை அம்பலப்படுத்த, உன் உதவியே போதும்! ஆம், நீ ஒருத்தியே போதும்!" என்று களிப்போடு அவளைப்பார்த்து நான் கூறினேன். அவள் அருகே அருகே வந்தாள்! என் திட்டம் பூர்த்தியாகப் போவதை எண்ணியவண்ணம் மெய் மறந்திருந்தேன்'

திடீரென்று எழுந்தேன்! என் மார்போடு அவள் மார்பைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள்—ஆ ஆ எனச்சிரித்துக் கொண்டே! எதிர்பாராத முத்தம் ஒன்றைத் தந்து விட்டு, பிரிந்து ஓடி நின்றாள்!

"செத்தேன்! செத்தேன்!" என்று நான் ஓவெனக்கதறினேன்.

"மதத் குருவை அடக்கப் போகிறவன்— ஆரியத்தை அழிக்கப் போகிறவன்—ஆஹா ஆஹா!" என்று கூறி இடி இடிப்பதைப் போலச் சிரித்தாள்.

கோபம் கொண்ட முகிலன் யானையின் தந்தத்தை வீசிவிட்டார்! ஓடினாள்! மலையினின்று காலிடறிக் கீழே சாய்ந்தாள்!

"ஐயோ! ஐயோ! இதுவா என் கதி என்று ஓலமிட்டேன்!

நொண்டிக் கிழவர் அவ்விடத்தை விட்டுச் செல்வதை அறிந்தேன்! மலை கிடு கிடு வென ஆடியது! கண்கள் மேலும் கீழுமாகச் சுழன்றன! என் வாழ்வு முடிந்தது என்றெண்ணினேன்! சுய நினைவற்று, சுருண்டு சாய்ந்தேன்!

(தொடரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ருங்கச் சில பெண்களுக்கு ஒரு விதத் தலைவலி உண்டாகும்.

பசித் தலைவலி என்றும் ஒரு வகையான தலைவலி இருக்கிறது. நீண்ட நேரமாகச் சாப்பிடாமல் பசியுடன் இருந்தால், இரத்தத்திலே சர்க்கரை குறைந்து, இந்தவலி உண்டாகும். சாப்பிட்டதும் அது அற்புதமாக மறைந்து போகும்.

கடைசியாக, நமது மன வுணர்ச்சிகளினால் உண்டாகும் தலைவலி. கோபம், பயம், துயரம், கவலை ஆகிய உணர்ச்சிகளினாலும் தலைவலி ஏற்படுவதுண்டு. [illegible] இந்த உணர்ச்சிகளின் வசப்படாமல் இருக்கவேண்டும் நாம்.

நாதியற்றுக்கிடக்கும் ஏழை மக்களுக்கும்
கேட்பாரற்றுக்கிடக்கும் பாட்டாளி மக்களுக்கும்
பரிந்து பேசும் ஒரே நூல்!

# "ஏழையின் அரசியல்"

(எஸ். சதாசிவம்)

**விலை அணா எட்டு**

**இன்பவாழ்வுப் பதிப்பகம்**

இரத்தின சபாபதிபுரம் போஸ்ட்,
கோயமுத்தூர்-S. I. R.

சென்னையில் கிடைக்குமிடம்:—
போர்வாள் அலுவலகம், 147. பவழக்காரத் தெரு.
சென்னை-1.




தொடர்கதை :

எதிரியைச் சாகசத்தோடு வீழ்த்தும் ஒரு புதிய முறை அறிந்தேன்! மதக்குரு வேதபாரகன் இரண்டு பெண் குழந்தைகளை வளர்த்தான்! அவைகளுக்குப் பாலில் ஒருவித விஷமூலிகையைக் கலந்து தந்து வந்தான்! பெண் குழந்தைகள் பெரிதாக ஆக ஆக ஆகாரத்தோடு அந்த விஷமூலிகையை விடாது தந்து வந்தான். இந்த வழியில் அந்தப் பெண் குழந்தைகளின் இரத்தத்தில் நன்றாக விஷம் கலந்து விட்டது! இரத்தமே ஒருவித விஷமாக மாறிவிட்டது! குழந்தைகள் பெரிய பெண்களானார்கள் அந்தப் பெண்களுக்குப் பெயர் விஷக் கன்னியர்! அவர்கள் உதட்டில் ஒரு சிறிய காயத்தை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருப்பார்கள். கொல்லவேண்டுமென்று நினைப்பவர்களுக்கு, முத்தம் தந்தால் அவர்களின் விஷ இரத்தம் காரியத்தை முடித்துவிடும்.

இதை அவள் கூறியதும் அவளைத் தொடக் கூட எனக்குப் பயமாக இருந்தது! கடைசியில் தன் உள்ளத்தைத் திறந்து அவள் தன் உணர்ச்சி வெள்ளத்தை ஓட விட்டாள்.

“விஷக் கன்னி நான்! முத்தமிட்டால் பிணம்! இது என்னை வளர்த்த மதக்குருவாம் என் இனத்தலைவனுக்கு வெற்றி! ஆகவே வெற்றி பெற்ற உணர்ச்சியில் பிணமான உடனே சிரிப்பேன். பிறகு பெண்களுக்கு இயற்கையாக எழும் அன்புணர்ச்சியினால் கண்ணீர் வடிப்பேன்! காளைகளைப் பிணமாக்குவது என் கடமை! மதக் குருவின் கட்டளை! ...... பெண்நான்! விஷமூலிகை இரத்தத்தை மட்டும் தான் விஷமாக்கிற்று! ஆனால் என் உணர்ச்சிகளை நசுக்கிவிடவில்லை! பெண்மை உணர்ச்சியினால், இளமைத் தாகத்தால் எவ்வளவு தவிக்கிறேன். தெரியுமா? ஆனால் இந்த சென்மத்தில் என் தாகம் தணியாது! என் பசி அடங்காது! ........” கண்ணீர் மல்க, சோகமான குரலில் விஷக் கன்னி கூறினாள்.

நாட்டிற்கே ஆபத்து இவள்! இவளைத் தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணினேன்! கன்னியின் நிலை கண்டு என்மனம் கலங்கியது. நடமாடும் ஆபத்து—நாட்டிற்குக் கேடு—என் கடமை என்ன? யோசித்தேன். ஒரு முடிவிற்கு வந்தேன்.

“அழகியே, விஷம் கலந்த பால்குடம் நீ! வீரர்களைக் கொல்லும் விஷப்பாம்பு! உன்னை நான் கொன்று விடப் போகிறேன்!”

என் குரல் எனக்கே பயமாக ஒலித்தது!

“வேண்டாம், வேண்டாமப்பா! பெண்ணைக் கொல்வது பாவமப்பா!” என்ற குரல் திடீரென்று எங்கிருந்தோ கேட்டது!

பத்தொன்பதாம் பகுதி

## எதிர்பாராத முத்தம்

“கொல்லாதே — யாரடா தடுப்பவன்?” என்று எரிச்சலோடும் கோபத்தோடும், எடுப்பான குரலில் நான் கேட்டேன்.

“நான்தான் அப்பா!” என்று ஒரு நொண்டிக் கிழவர் என் எதிரே வந்து நின்றார்! அவர் கையில் உளி இருந்தது. கண்ணில் கலையின் ஒளி இருந்தது. குரலில் கணீரென்ற ஒலி இருந்தது. ஆடிக் கொண்டிருந்த தாடி இருந்தது. வாடி இருந்த முகத்தில் சோகத்தின் சாயல் ஓடி இருந்தது. அன்பும் அறிவும் அவரிடத்தில் கூடி இருக்கக் கண்டேன்! முதல் பார்வை வீச்சிலேயே என்னைப் பணிய வைத்தார். கோபம் தணிந்து மரியாதை காட்டினேன்!

“ஐயா, என்னைத்தடுக்காதீர்”

“பித்துப் பிடித்தவனும் பெண்ணைக் கொல்லத் தயங்குவானே!”

“பெண் அல்ல இவள்!”

“வேறு?”

“விஷம் பூசிய வாள் இவள் நச்சுப்பை கொண்ட நல்ல பாம்பு இவள்! கன்னியின் உருவில் உலவும் காட்டுத் தீ இவள்!......”

“என்னப்பா சொல்கிறாய் நீ?”

“விஷக் கன்னி இவள்!”

நொண்டிக் கிழவர் புரியாது விழித்தார். நான் விளக்கம் கூறினேன். நடந்ததையும் அறிவித்தேன்.

“ஆபத்தானவள்தான்!” என்

ளூர் கிழவர் மெதுவான குரலில். விஷக்கன்னியின் விழிகளில் நீர் வழிந்துகொண்டிருந்தது!

"பாம்பை முத்தமிட்டாயாமே, உண்மையா?" என்று அவளைக் கேட்டார்.

"ஆம், பாம்பை முத்தமிட்டேன்! உண்மைதான்! நான் முத்தமிட்டு சாகாது ஒரு உயிர் நிலைத்திருக்கிறதென்றால், அது பாம்பின் உயிராகத்தான் இருக்கும்! என்னிடத்திலும் விஷமிருக்கிறது, பாம்பினிடத்திலும் விஷமிருக்கிறது. விஷத்தோடு விஷம் கலந்தால் ஒன்றுமாவதில்லை! நாகத்தைத் தவிர வேறுயாரிடம் நான் முத்தமிட்டு ஆசை தீர முடியும்? ஐயா பெரியவரே, நான் பரிதாபத்திற் குரியவள்! வஞ்சக மதகுருவினால் வாழ்விழந்தவள்! சூழ்ச்சிக்காரனின் கட்டளையின்படி, சுந்தரர் பலரைச் சுருண்டு வீழ்ந்து மடியச் செய்தவள்! பாபச் செயல் புரிந்த பாதகியாக இருப்பினும், காளையர் பலரைக்கொன்ற காதகியாக இருப்பினும் என்னை மன்னித்துவிடுங்கள்! அம்பு விட்டவனிடத்தில் வஞ்சம் தீர்த்துக் கொள்வதைவிட்டு, அம்பினிடத்தில் கோபத்தைக் காட்டுவது முறையா?........." என்று அழுதுகொண்டே அணங்கு பேசினாள்.

"நீ, தாகம் தணியாதவள், தணித்துக்கொள்ள முடியாதவள்! அப்படி இருக்க, நீ ஏனம்மா வாழவிரும்புகிறாய்?" என்று கிழவர் வினவினார்.

"ஏன் வாழ விரும்புகின்றேனா? ஒரு பாபமும் செய்யாத என வாழ்வைப் பாழாக்கிய பாதகனைப் பழிக்குப் பழி வாங்க..........." பற்களை நறநறவெனக் கடித்தாள்!

"என்ன, என்ன? மதக்குருவைப் பழிக்குப் பழி வாங்கப் போகிறாயா? உண்மையாகவா?" என்று துடிதுடிப்போடு நான் கேட்டேன்!

"உண்மையாகத்தான்! சத்தியமாகத்தான்!" உறுதியான குரலில் உரைத்தாள் இப்படி!

"எனக்கும் அதே எண்ணம் தான்! வஞ்சகனை வாட்டிவதைக்கவேண்டும்! ஊரை விட்டு ஓட்டி உதைக்கவேண்டும்! நீ எனக்கு உதவி அளிக்கிறாயா?"

"சத்தியமாக உதவி அளிக்கிறேன்!"

"உன்போல் இன்னும் எத்தனை பேர் இருக்கின்றனர்!"

"ஒரே ஒருவள்தான் இருக்கிறாள்!"

அவளிடமிருந்த கோபம், பயம் எல்லாம் எனக்குப் போய் விட்டது! பெரிய உண்மையொன்றைக் கண்டு பிடித்துவிட்டோமென்ற திருப்தியும் பூரிப்பும் எனக்கேற்பட்டது!

கிழவரின் கண்ணில் என் முதுகிலிருந்த புண் பட்டது! வியப்போடும் விசனத்தோடும் விவரத்தை வினவினார் கூறினேன். கண்ணீர் விட்டார்.

நானும் கிழவரும் விஷக்கன்னியும் மலை உச்சியிலிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்தோம்! கிழவர் ஏதோ ஒரு மூலிகையைப் பறித்துவந்து புண்ணில் வைத்துக் கட்டினார்.

தாபமணி, தகைஇல்லத்தில் ஒரு நொண்டிக் கிழவரை நீ பார்த்தாய் அல்லவா? அந்தக் கிழவரைத்தான் அன்று, முதன் முறையாக நான் சந்தித்தேன். அவர் பெயர் முகிலன். சோழ நாட்டைச் சேர்ந்தவர் என் தந்தையின் உயிர் நண்பர்! அந்நொண்டிக் கிழவர் கூறிய தன் வரலாற்றை நானும் அவளும் கேட்டோம்.

முகிலன் சிறந்த சிற்பி! உயிரற்ற கல்லைக் கொண்டு, உணர்ச்சியும் உயிரும் கொண்டது போன்ற அபூர்வமான சிலைகளைச் செய்வதில் இணையற்றவர். சேரன் சேதனின் தந்

(10-ம் பக்கம் பார்க்க)


# திராவிடர் டைரி—1950

அழகிய இரண்டாம் பதிப்பு

இந்தப் பதிப்பில் முதற்பதிப்பின் பின்னர் தோன்றிய 50 தி. மு. கிளைக்கழகச் செயலுறுப்பினர் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

500 பக்கம் விலை அணா 12

தபாலில் 0 14 0 பதிவுத் தபாலில் 1 2 0

இதுவரை கிடைத்துள்ள ஆர்டர்களுக்குப்போக சொற்ப பிரதிகளே மிச்சமுள்ளன.

'போர்வாள் அலுவலகம்'

பவழக்காரத் தெரு, சென்னை 1.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)